**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 22–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.744/2023

பி.வா.சா.1 பேபிலட்சுமி க/பெ ராமகிருஷ்ணன்

<u>வாதிதரப்பு குறுக்கு விசாரணை:–</u>

1. எனக்கும் இறந்து போன என் முதல் கணவரான சாமிநாதனுக்கும் திருமணம் எப்போது நடந்தது என்றால் 2010 வருடம் ஆகும். என்னுடைய மகன் சர்வேஷ்பிரவித் 06.04.2012ம் வருடம் பிறந்தார். என் முதல் கணவர் அபிதாபி நாட்டில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். மாதம் அவர் ரூ.1,50,000/– பணம் சம்பாதித்து வந்தார்.

2. எந்த வருடத்திலிருந்து என் முதல் கணவர் அபிதாபி நாட்டில் வேலை பார்த்து வந்தார் என்றால் 2012ம் வருடம் முதல் என் கணவர் வேலை பார்த்து வந்தார். என் முதல் கணவர் அபிதாபி நாட்டில் சாலை விபத்தில் எந்த வருடம் இறந்தார் என்றால் 20.01.2015ம் வருடம் என் கணவர் சாலை விபத்தில் இறந்துவிட்டார்.

3. நானும், என் மகன் சர்வேஷ்பிரவித் ஆகியோருக்கு என் இறந்துபோன கணவர் சாமிநாதனுக்குரிய வாரிசுகள் என்று வாரிசு சான்றிதழ் வாங்கியுள்ளேன். மேற்படி வாரிசு சான்றிதழை ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவசியம் ஏற்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். என் முதல் கணவர் அபிதாபில் சாலை விபத்தில் இறந்து போனதிற்கு நஷ்டஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் என் கணவரின் நிறுவனமே நஷ்டஈடு வழக்கு தாக்கல் செய்தது.

4. நிறுவனம் நஷ்டஈடு வழக்கை எப்படி தாக்கல் செய்யும் வழக்கிற்காக நான் நஷ்டஈடு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நஷ்டஈடு வழக்கில் வழங்கிய இழப்பீடு தொகைக்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னிடம் இல்லை.

5. என் முதல் கணவர் இறந்ததிற்கு ரூ.36,00,000/-த்தை 2015ம் வருட இறுதியில் பெற்றுக் கொண்டேன். நான் பெற்ற ரூ.36,00,000/-த்தில் என்னுடைய மைனர் மகனுக்கு படிப்பு மற்றும் பண உதவிகள் இன்றைய தேதி வரை செய்துவந்தேனா என்றால் என் மகன் என்னிடம் இல்லை என்பதால் நான் அவருக்கு பண உதவி செய்ய இயலவில்லை.

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.